ஆண்டு அறிக்கை

2007

இலங்கை போக்குவரத்துச் சபை

உள்ளடக்கம்

01 தொலை நோக்கு, குறிக்கோள், நோக்கங்கள்

02 அறிமுகம்

03 தலைவரின் செய்தி

04 செயற்திறன்

05 இறுதி கணக்குகள்

06 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தொலை நோக்கு

பிராந்தியத்தின் அதி சிறந்த பயணிப் போக்குவரத்தாளர்.

குறிக்கோள்

பொதுமக்களுக்கு பாதுகாப்பான , நம்பத்தகுந்த , வசதிகளுள்ள வீதிப்பயணிப் போக்குவரத்துச் சேவையை நியாயமான கட்டண முறையின் கீழ் சேவை அர்ப்பணிப்புடன் செயலாற்றும் உற்பத்திவளமிக்க பணியாளரின் மூலம் ,சகல வளங்களையும் உச்சநிலையில் பயன்படுத்தி பெற்றுக்கொடுத்து , பொருளாதார ரீதியில் சமநிலையைப் பேணும் நிறுவகமாக இயங்கல்.

நோக்கங்கள்

01. 12 பிராந்திய காரியாலயங்கள் மூலம் சிறந்த தர முடைய பயனுடைய பஸ்சேவைகளை ஊக்குவித்து அவற்றை கண்காணித்து இணைத்து ஆலோசனை வழங்குதல்

02. பாடசாலை செல்லும் சிறார்களுக்கு திருப்திகரமான பஸ் சேவைகளை அளித்தல்

03. பண நோக்கங்களுக்காக தனியார்துறையினரால் செயலாற்றப்படாமல் அசட்டை செய்யப் பட்டுள்ள வருவாயற்ற பாதைகளில் பஸ் சேவைகளை அளித்தல்

04. புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்திலிருந்து தூர இடங்களுக்கு பஸ் சேவைகளை அளித்தல்

05. பொது , தனியார் துறை போக்குவரத்து முகவர் நிலையங்களை இணைத்தல்.

06. விழாக்கள் , விசேட வைபவங்கள் , பாராளுமன்ற/மாகாண சபைத் தேர்தல்கள் முதலிய தேவைகளுக்கு பஸ் சேவைகளை இணைத்தல்.

07. தபால்களையும் , பத்திரிகைகளையும் பஸ்களில் ஏற்றிச் செல்லல்.

08. பஸ் செயலாற்றத்திற்காக பொது திறைசேரி , தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாகாணசபைகள் , உரிய அமைச்சுகள் அத்துடன் இதர தொடர்புடைய முகவர் நிலையங்கள் ஆகியவற்றுக்கும் பிராந்திய காரியாலயங்களுக்குமிடையே இணைப்பை ஏற்படுத்துதல்.

09. இ.போ. சபை சாரதிப்பயிற்சி சாலைகளிலிருந்து நன்கு பயிற்றப்பட்ட ஒழுக்காற்றுடைய சாரதிகளை அளித்தல்.

10. சாரதிகளுக்கும், நடத்துனர்களுக்கும், பொறிவலர்களுக்கும், மேற்பார்வை பணியாளர்களுக்கும் கருத்தரங்குகள் / தொழில் பாசறைகள் ஆகியவற்றை நடாத்துதல்.

11. பிராந்திய வேலைக்களங்களால் உற்பத்தி செய்யப்படும் அலகுகள்/துணை அலகுகள் ஆகியவற்றை சாலைகளுக்கு அளித்தல்.

12. வயது வந்தோர்களுக்கும் , பாடசாலை மாணவர்களுக்கும் கவர்ச்சிகரமான கழிவு வீதங் களில் பருவ சீட்டுகளை அளித்தல்.

13. முக்கியமான மாற்று உறுப்புகளை மாகாண வேலைக்களங்களுக்கு விநியோகிப்பதற்காக நாரஹேன்பிட்டியிலுள்ள இ.போ.சபை தலைமை அலுவலகத்தில் இடைப்பெயர்சி களஞ்சியமொன்றை பேணல்.

14. சாலைகளில் பாதுகாப்பு புலனாய்வுகளையும் , திடீர் பரிசோதனைக்குழு செவ்வை பார்த்தல் முதலியவற்றையும் நடாத்துதல்.

அறிமுகம்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு போக்குவரத்தின் எல்லா அம்சங்களும் அவசியமானது என்பதில் ஐயத்திற்கிடமில்லை. இக்கூற்றுக்கு வீதிப் பயணப் போக்குவரத்து விதிவிலக்கல்ல. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாட்டில் கிராமங்களையும், நகரங்களையும் அதன் மூலம் முழு நாட்டையுமே இணைக்கும் முக்கிய பாத்திரத்தை பஸ் வண்டி வகிக்கின்றது.

1957.10.31 ஆம் திகதி 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகார சட்டத்தின் பிரகாரம் நாடு முழுவதும் 80 பஸ் செயலாற்றுனநர்களால் மொத்தமாக 1200 பாதைகளில் செயலாற்றப்படட 3532 பதிவு செய்த பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டன. இதன் விளைவாக 1958.01.01 முதல் இலங்கை போக்குவரத்து சபை உருவாகியது.

அன்று முதல் 1977 ஆம் ஆண்டு வரை இ.போ.சபை வீதிப் பயணப் போக்குவரத்தில் ஏகபோக உரிமையைக் கொண்டிருந்தது. 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க போக்குவரத்துச் சபை சட்டத்தின் மூலம் இ.போ.சபையினால் இணைக்கப்பட்ட 10 பிராந்திய போக்குவரத்து சபைகள் 1978 ஆம் ஆண்டு இ.போ.சபையை பன்முகப்படுத்தியதன் மூலம் உருவானது. சிறியளவிலான அலகுகள் உள்ளூர் பிராந்திய தேவைகளுக்கும், உள்ளூர் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவான தீர்வு கண்டு பயணம் செய்யும் பொதுமக்களுக்கு வினைத்திறனுடைய பயனுள்ள விளைவுகளை இ.போ.ச பன்முகப்படுத்தவதன் மூலம் அடையலாம் என அரசு கருதியது.

ஆயினும் இ.போ.ச. தொடர்ந்து பெருவாரியான நட்டத்தில் இயங்கியமையினாலும், பொருளா தாரம் சுதந்திர மயமாக்கப்படல் வேண்டுமென்ற நவீன எண்ணக்கருவினால் உருவாகிய பயணத் தேவையை பூர்த்தி செய்ய முடியாமையினாலும் வீதிப் பயணிப் போக்குவரத்துக்கு தனியார் துறையை அனுமதிப்பது என முடிவு செய்யப்பட்டது.

பொதுத் துறையை மீள அமைக்கும் பணியில் ஒரு பகுதியாக இ.போ.ச. மக்கள் மயமாக்கப் படுவதற்கென அடையாளம் காணப்பட்டது. அரசு தனியார் மயப்படுத்தலில் உறுதியான நம்பிக்கையை வைத்திருந்தமையால் இம் மாற்றம் அரச கூட்டுத்தாபனங்களை அதாவது அரச உடைமையாக்கப்பட்ட வியாபார முயற்சிகளை பொது கம்பனிகளாக மாற்றும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அதிகார சட்டத்தின் கீழ் இடம்பெற்றது.

மக்கள் மயமாக்கப்படுத்தலின்போது இயங்கிய 93 போக்குவரத்து சபை சாலைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறான வரையறுக்கப்பட்ட கம்பனிகளாகின. ஊழியர்களின் மத்தியில் கம்பனியின் மொத்தப் பங்குத் தொகையின் அரைவாசி விநியோகிக்கப்பட்டு மீதிப் பகுதியை பொதுத் திறைசேரி வைத்திருந்தது. பெரும்பாலும் ஊழியர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை இக் கம்பனிகளின் நிர்வாகத்தை நடத்தியது. மக்கள்மயமாக்கள் ஏனோ தானோ என்ற முறையில் செயற்படுத்தப்பட்டமையால் விரும்பிய விளைவுகளை எட்ட முடியவில்லை.

எனவே 1997 ஆம் ஆண்டு 1991 ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தின் திருத்த மூலம் பஸ் கம்பனிகள் 11 கொத்தணி பஸ் கம்பனிகளாக மாற்றப்பட்டன. கொத்தணி பஸ் கம்பனிகளாலும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. அதிக பணியாளர், ஒழுக்காற்றில் பெருவீழ்ச்சி, நியாயமற்ற போட்டி, சமூகக்கடப்பாடுகள், தொழில் முறைமையின்மை, வினைத்திறன்மையின்மை, செயலாற்று செலவுகளில் உயர்ச்சி, அரசியல்,தொழிற்சங்க முறையற்ற தலையீடு, கட்டுமீறிய ஊழல் ஆகியன கொத்தணி பஸ் கம்பனிகளில் நிலவிய சில பிரச்சனைகளாகும்.

மேற்குறித்த பிரச்சனைகளுக்கு தீர்வினைக் காணும் பொருட்டு 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் 2005.10.19 ஆம் திகதி முதல் இலங்கை போக்குவரத்துச் சபை தாபிக்கப்பட்டது.

தலைவரின் செய்தி

இ.போ.சபையின் முன்னேற்றப் பாதையை நோக்கி முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்ட வருடம் ஒன்றாக 2007 ஆம் ஆண்டினை குறிப்பிட முடியும். சபையின் செயலாற்றுகையை ஒழுங்குபடுத்தும் முகமாகவும், அதுவரையும் செயலாற்றப்பட்ட போக்குவரத்து முறைகளில் சரியான நடவடிக்கைகளை பின்பற்று முகமாகவும் இ.போ.சபையின் சகல பதவிகளுக்கும் புதிய அலுவலர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டமை 2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற மிகப் பெரிய சாதனையாகும். இ.போ.சபை உருவாக்கப்பட்டதிலிருந்து அதன் பின்னரான இடைப்பட்ட இரண்டு வருட காலங்கள் கடந்த பின்னர் எடுக்கப்பட்ட இந்த தீர்மானங்க ளினால் சபையின் சகல செயற்பாடுகளும் ஒழுக்க முறையான கட்டமைப்பு ஒன்றின் கீழ் செயற்பட ஆரம்பித்தது.

புதிதாக உருவாக்கப்பட்ட இ.போ.சபையின் தலைமை அலுவலகத்திற்கு பொதுமுகாமையாளர் ஒருவர், நான்கு பிரதி பொதுமுகாமையாளாகள், பிரிவுத் தலைவர்கள் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு பிர தான பிராந்திய முகாமையாளர்கள் உள்ளடங்களாக ஏனைய அலுவலர்கள் ஆகியோருக்கு விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சையினூடாக தேர்ந்தெடுக்கப்பட்டமையானது இ.போ.சபை சம்பிர தாயங்களைப் பின்பற்றும் ஒரு நிறுவனமாக செயற்படுவதாக கருத முடியும்.

2007 ஆம் ஆண்டில் பஸ் வண்டி அணிக்கு புதிதாக 766 பஸ் வண்டிகள் இணைத்துக் கொள்ளப்பட்ட துடன், 135 டாட்டா வகை எஞ்சின் தொகுதிகளும், 135 லேலன்ட் வகை எஞ்சின் தொகுதிகளும் ஏற்க னவே செயற்படாது இருந்த பஸ் வண்டிகளை திருத்துவதற்காக பெறப்பட்டது. அதன்படி 2005, 2006 ஆம் ஆண்டுகளை விட 2007 ஆம் ஆண்டில் அதிகளவு எண்ணிக்கையிலான பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்த முடிந்தது. இதன் பிரதிபலனாக 2007 ஆம் ஆண்டில் 2006 ஆம் ஆண்டை விட நாளாந்தம் 122,000 கி.மீ மேலதிகமாக செயலாற்ற முடிந்தது. இதனை பொதுமக்களுக்கு கிடைத்த விசேட வெற்றி யாக கொள்ள முடியும்.

பொதுமக்களுக்கு வழங்கிய சேவையின் பிரதிபலனாக 2007 ஆம் ஆண்டின் செயலாற்றுகை மிகவும் உயரிய மட்டத்தில் இருந்ததாக புள்ளிவிபரங்கள் ஊடாக அறிய முடிகிறது. வழிப்பட்டியல் வருமானம் 2006 ஆம் ஆண்டை விட 2007 ஆம் ஆண்டில் நாளாந்தம் 7.6 மில்லியன் ரூபாவினால் அதிகரித்து காணப்பட்டதுடன், அவ்வதிகரிப்பானது 35.02% வீதமாகவும் காணப்பட்டது. பருவ காலச் சீட்டு விற்பனை வருமானமும் 2006 ஆம் ஆண்டை விட 2007 ஆம் ஆண்டில் நாளாந்தம் சுமார் 439,000/= ரூபாவினால் அதிகரித்து காணப்பட்டது. இது 80.71% ஆன அதிகரிப்பாக காணப்பட்டது.

இ.போ.சபையின் வருமான மட்டம் அதிகரிக்க ஆரம்பித்த போது, வரவு செலவு திட்டத்தின் ஊடாக அனுமதிக்கப்படும் திறைசேரி உதவு தொகைகள் குறைக்கப்பட்டது. மூலதனச் செலவினம், 2006 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 629 மில்லியன் ரூபாவினை விட குறைவாக இருந்ததுடன், 2007 ஆம் ஆண்டு க்காக அனுமதிக்கப்பட்ட தொகையில் 83% மாத்திரமே வழங்கப்பட்டது. அதேவேளை மீள்வரும் செலவினம், 2006 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 853 மில்லியன் ரூபாவினை விட குறைவாக இருந்ததுடன் , 2007 ஆம் ஆண்டுக்காக அனுமதிக்கப்பட்ட தொகையில் 96% மாத்திரமே வழங்கப்பட்டது.

இதன்படி, நிறுவனத்தின் நிதி நிலைமையை அதிகரிப்பது என்பது பலத்த சவாலாக இருந்த போதிலும், வழிப்பட்டியல் வருமானமும் மற்றும் பிற வருமானங்களும் திருப்திகரமான முறையில் அதிகரித்து சென்றமை நிறுவனத்திற்கு கிடைத்த மிகப் பெரியதொரு வெற்றியாகும். முக்கியமாக சகல தரங்களிலுமுள்ள ஊழியர்களினதும் ஒத்துழைப்பு காரணமாக இச்சவால்கள் அனைத்தும் அவ்வளவு சிரமமின்றி வெற்றி கொள்ள முடிந்தமை இ.போ.சபைக்கு கிடைத்த அதிஸ்டமாகும்.

சசி வெல்கம
தலைவர்
இலங்கை போக்குவரத்து சபை

திட்டமிடல் , அபிவிருத்தி பகுதி

சகல சாலைகள் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் தொடர்பாக மாதாந்த இலாப நட்டக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டு , இந்த அறிக்கைகளின் அடிப்படையில் பகுப்பாய்வு அறிக்கைகளை தயாரித்தல். வருவாயற்ற பாதைகளில் நடைபெறும் போக்குவரத்துக்காக வழங்கப்படும் உதவு தொகைகள் தொடர்பில் அறிக்கை தயாரித்தல், இவ் அறிக்கைகளை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல்.பருவகாலச்சீட்டு மாணியங்கள் , காலாண்டு செலவு அறிக்கை சாரதி பயிற்சி பாடசாலைகள் , மாகாண வேலைக்களங்கள் மற்றும் சுற்றுலா பங்களாக்களின் இலாப நட்டக் கூற்றுகள் தயாரித்தல்.தலைவர்,பொதுமுகாமையாளரின் கலந்துரையாடல்களுக்காக தேவைப்படும் அறிக்கைகள், புள்ளிவிபரங்கள் தயாரித்தல். போக்குவரத்து அமைச்சிற்கு தேவைப்படும் அறிக்கைகள் தயாரித்தல். சிரேஷ்ட முகாமைத்துவ கலந்துரையாடலுக்காக தேவைப்படும் அறிக்கைகளைத் தொகுத்தல். குறைபாடுகளை அடையாளம் காணல், முகாமைத்துவ தீர்மானங்களை மேற்கொள்ளல் , சாலைகளின் அபிவிருத்தி போன்றவற்றிற்கு மேற்குறித்த அறிக்கைகள் பெரிதும் பயனுள்ளதாக இருந்தன.

உள்ளகக் கணக்காய்வு பகுதி

2007 ஆம் ஆண்டில் 1350 கணக்காய்வு விசாரணை அறிக்கைகள் வெளியிடப்பட்டது. இந்த கணக்காய்வு விசாரணை அறிக்கைகளின் படி ரூபா 14,272,995.44 அறவிடப்படவேண்டியிருந்தது.

செயலகப் பகுதி

2007ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை கிரமமாக கூட்டப்பட்டதுடன், அவ்வருடத்தில் அவசர தேவை நிமித்தம் ஒரு கூட்டம் உள்ளடங்களாக 15 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் கூட்டப்பட்டது.

கேள்விச் சபை

சாலைகள் , தலைமை அலுவலகம் ஆகியவற்றின் அச்சிடல் தேவைகளுக்காக கேள்விபத்திரங்கள் கோருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

சாலைகள் , தலைமை அலுவலகம் ஆகியவற்றின் அலுவலக உபகரணங்கள் கொள்வனவுக்காக கேள்விபத்திரங்கள் கோரப்பட்டதுடன் அனுமதிக்கப்பட்ட விலைகளும் பெறப்பட்டன.

சாலைகள் , மாகாண வேலைக்களங்களுக்குத் தேவைப்படும் வாகன உதிரிப் பாகங்கள் கொள்வனவுக்கு கேள்விபத்திரங்கள் கோரப்பட்டதுடன் அனுமதிக்கப்பட்ட விலைகளும் பெறப்பட்டன.

சிவில் பொறியியல் வேலைகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டன.

பாவனையிலில்லாத கழித்துவிடப்பட்ட பஸ்கள் மற்றும் கழித்துவிடப்பட்ட பொருட்களின் விற்பனை க்காக நடவடிக்கைள் எடுக்கப்பட்டன.

பாதுகாப்புப் பகுதி

இ.போ.சபையின் கீழுள்ள முகவர் நிறுவனங்களினது மனிதவள மற்றும் ஏனைய வளங்களிற்கு பாதுகாப்பு , பந்தோபஸ்து வழங்கப்பட்டன.

இ.போ.சபையின் கீழுள்ள முகவர் நிறுவனங்களினது முக்கிய நபர்களுக்கும் மற்றும் முக்கிய இடங்களிற்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

தொடர்புடைய முகவர் நிறுவனங்களின் வாகன தரித்தல்கள், சகல வழங்கல்கள், விநியோகங் களை கட்டுப்படுத்தல், மேற்பார்வை செய்தல்.

இ.போ.சபையின் கீழுள்ள முகவர் நிறுவனங்களினது தீ அணைக்கும் உபகரணங்களை பராமரித்தல், மேற்பர்வை செய்தல்.

இ.போ.ச. தலைமை அலுவலகத்தின் கீழ் உள்ளடங்கும் சகல சேவை நிலையங்களிலும் சேவையாற்றும் ஊழியர்களுக்கு நேரடியாக இலவச பயண அனுமதிப் பத்திரம் வழங்குதல்

வாணிப , விநியோகப் பகுதி

பரிசீலனையில் உள்ள ஆண்டில் பிராந்தியங்கள், சாலைகள் மற்றும் மாகாண வேகைக்களங் களுக்கு விநியோகிக்கப்பட்ட மாற்றுருப்புகளின் பெறுமதி கீழே காட்டப்பட்டுள்ளது.

ஆண்டு	கட்டுப்பெத்தை மத்திய களஞ்சியம்	பிரதான களஞ்சியம், நாரேஹேன்பிட்டி	மொத்தம்
2007	ரூபா. 211,104,023 135 புதிய எஞ்சின் களும் விநியோகிக்கப் பட்டது	ரூபா. 103,517,094.86 (மாற்றுருப்புகள்) ரூபா. 128,478,225 (ரயர் தொகுதிகள்) ரூபா. 26,687,266 (பற்றிகள்)	ரூபா. 258,682,585.86



செயலாற்றுப் பகுதி

பஸ் கூட்டம்	8,200
செயல்படும் நிலையில் உள்ள பஸ்களின் எண்ணிக்கை	4,669
செயலாற்றிய பஸ்களின் எண்ணிக்கை	4,116
செயல்படும் நிலையில் உள்ள பஸ் கூட்டத்தின் படி செயலாற்றிய பஸ்களின் வீதம்	57 %
பஸ் கூட்டத்தின் படி செயலாற்றிய பஸ்களின் வீதம்	50 %
செயல்படும் நிலையில் உள்ள பஸ்களின் எண்ணிக்கை படி செயலாற்றிய பஸ்களின் வீதம்	88 %
மொத்த செயலாற்றிய கி.மீ	26,193,667
மொத்த வருமானம் (ரூபா)	1,384,924,742
வழிப்பட்டியல் வருமானம் (ரூபா)	989,449,327
மொத்த வருமானத்தில் வழிப்பட்டியல் வருமான வீதம்	77 %
கி.மீற்றர் ஒன்றுக்கான வருவாய் (ரூபா)	52.87
மொத்த செலவு	1,370,745,924
கி.மீற்றர் ஒன்றுக்கான செலவு (ரூபா	52.33
கி.மீற்றர் ஒன்றுக்கான இலாபம் / (நட்டம்) (ரூபா) தேய்மானத்திற்கு பின்பு	(3.35)

2006 ஆம் ஆண்டிலும் பார்க்க 2007 இல் செயலாற்றிய கிலோமீட்டரில் சிறந்த முன்னேற்றத்தை காட்டுகின்றது

நாளொன்றுக்கான சராசரி செயலாற்றிய கி.மீட்டர் -2004 779,729
-2005 679,091
2006 713,753
2007 835,313



செயற்பாட்டு முன்னேற்றங்களின் படி வழிப்பட்டியல் வருமானம் மிகவும் உயரிய மட்டத்தில் அதிகரித்துள்ளது.

நாளொன்றுக்கான சராசரி வழிப்பட்டியல் வருமானம்	-2004	ரூபா.மில்லியன்	16.5
	2005		17.6
	2006		21.7
	2007		29.3



வழிப்பட்டியல் வருமானம் 20% ஆல் அதிகரித்தபொழுது பருவகாலச்சீட்டு வருமானம் 40% க்கு கூடுதலாக அதிகரித்துள்ளது.

நாளொன்றுக்கான சராசரி பருவகாலச்சீட்டு வருமானம்	-2004	ரூபா.	737,779
	2005		780,368
	2006		544,749
	2007		984,430



தொழில்நுட்பப் பகுதி

மாகாண வேலைக்களங்களினூடாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் உற்பத்தி பெறுமதி

வகை	அலகுகள்	பெறுமதி
எஞ்சின்	563	59,115.000
கியர் பெட்டி	411	18,289,500
அக்சல்	47	2,350,000
பஸ்உடற்கோப்புகள்	144	19,080,000
பம் பழுது பாத்தல்	335	2,695,000
இன்ஜெக்ரர்	1,274	955,500
ரயர்	960	2,016,000

		104,501,000
		==========





புதிய பஸ்கள் வழங்கள்

2007 ஆம் ஆண்டில் 766 புதிய பஸ்கள் வழங்கப்பட்டன.

புதிய எஞ்சின்கள் வழங்கள்

2007 ஆம் ஆண்டில் 135 டாட்டா எஞ்சின்களும் , 135 லேலன்ட் எஞ்சின்களும் வழங்கப்பட்டன.

திடீர் பரிசோதனைக் குழு பிரிவு

வழிப் பட்டியல் வருமானத்தில் ஆகக் குறைந்தது 25 % முறையற்ற விதத்தில் கையாளப்படுகிறது. ஆதலால் இதனை தடுப்பதற்கு விசேட திடீர் பரிசோதனை குழு ஈடுபடுத்தப்பட்டது. வருமான இழப்பு பின்வரும் புள்ளி விபரங்களில் காட்டப்பட்டுள்ளது.

வருடம்	பாரதுாரமான மோசடி	சிறிய மோசடி	பற்றுச்சீட்டின்றி பயணம் செய்த பிரயாணிகளிடமிருந்து அறவிட்ட தண்டப் பணம்
2007	884	3,340	1.027,054.50 ரூபா

மனித வளப் பகுதி

2007 ஆண்டு காலப்பகுதியின் பதவியணியினரின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

சாரதிகள்	8,826
நடத்துனர்	8,326
மெக்கானிக்	5,798
ஏனையோர்	14,194
மொத்தம்	**37,144**



நிலையான ஊழியர்கள்	34,708
அமையம்	1,170
ஒப்பந்தம்	953
சேவை நீடிப்பு	313
மொத்தம்	**37,144**



நிறைவேற்று ஊழியர்கள்	2,052
ஏனைய சகலரும்	35,092
	37,144



.

கணக்கீட்டு கொள்கைகள்

1.நிதிக் கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமையவும் வரலாறறுச் செலவு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு மரபுக்கமையவும் தயாரிக்கப்பட்டு இ..போ.சபையின் சுற்றியல் அலகுகளின் நிதிப்பெறுபேறுகளுடன் இணைக்கப்பட்டதன் பின்னர் ஒன்று சேர்த்து சமர்ப்பிக்கப்படுகின்றது.

2. ஐந்தொகையும், சபைக் கணக்குகளும் ஆயத்தம் செய்யப்படுவதற்கு பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு அடிப்படைக் கொள்கைகள் பின்பற்றப்பட்டதுடன், திரட்டப்பட்ட வருவாய், செலவு ஆகியவற்றிற்கு கணக்கீட்டு கொள்கைகள் உறுதியாகப் பிரயோகிக்கப்பட்டு அவை தொடர்பான காலத்திற்கு நிதிக்கூற்றுகளில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன.

3. நிலையான சொத்துகள் தேய்மானம் நீங்களாக கொள்விலையில் ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளன. மூலதன நடைபெறும் வேலை நிலையான சொத்துகளாகக் கருதப்படவில்லை. 23,190,343.ஃஸ்ரீ ரூபா பெறுமதியான காணிகளில் சபை குடியிருக்கிறது. ஆயினும் இவற்றின் உறுதிகள் இன்னமும் சபைக்குக்கு கிடைக்கவில்லை இக்காணிகளின் முழுப்பெறுமதி நிலையான சொத்துகளின் கீழ் காட்டப்படவில்லை. இக்காணிகளுக்கான கொடுப்பனவு 8,299,517.ஃஸ்ரீ ரூபா பெறுமதியானது நிலையான சொத்துகளின் கீழ் முற்பணமாக காட்டப்பட்டுள்ளது.

4. கொள்வனவு செய்யப்படும் வருடத்திற்கு தேய்மாண ஏற்பாடு செய்யபடாததுடன் விற்பனை செய்யப்படும் வருடத்திற்கு முழுமையான தேய்மாண ஏற்பாடு செய்யபடுகின்றது.தேய்மாண ஏற்பாடு நேர்கோட்டு முறையில் பின்வரும் வீதங்களில் செய்யப்படுகின்றது.

கட்டிடம்	2..5%
பஸ் , ஏனைய வாகனங்கள்	12..5%
பொறி, உபகரணங்கள்	10%
தளபாடங்கள்	10%
கணனிகள்	25%

5. இளைப்பாறும்போது ஊழியர்களின் ஒவ்வோராண்டு சேவைக்கும் ஒரு மாதச் சம்பளத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது புத்திசாதுரியமானதும் நீதி நியாயமானதுமாகும்.

6. பெறவேன்டிய வருமானம்,பொலிஸ் வாரன்ட்,ஏனையவைக்கு 5% அடிப்டையில் அறவிடமுடியா கடன்களுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

7. முதல் உள்ளே முதல் வெளியே முறையில் கையிருப்பு பெறுமதியிடல் செய்யப்படுகின்றது.

8. இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இற்கு ஏற்ப பஸ்களுக்கான அரச மாணியங்கள் வருமானமாக அங்கிகரிக் கப்பட்டுள்ளது.அதனுடைய ஆயுட்காலமான 8 வருடங்களுக்கு பதிவளிக்கப்படுகின்றது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. [illegible]/2007 | ඔබේ අංකය / உமது இல / Your No. | දිනය / திகதி / Date: 2013 பெப்ரவரி 08

தலைவர்
இலங்கை போக்குவரத்துச் சபை

இலங்கை போக்குவரத்துச் சபையின் 2007 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை போக்குவரத்துச் சபையின் 2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2007 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. 2007 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை உரிய காலப்பகுதிக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை இதுவரையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் சம்பந்தமாக முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887220
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887221
ඊමේල් ලිපිනය / ஈ மெயில் / E-mail: oaggov@sltnet.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ளமுடியாதுள்ளேன்

1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2.4, 2.2.5., 2.2.6, 2.2.7, 2.2.8 மற்றும் 2.2.9 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று என்பவற்றைத் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிர்ணயிக்க முடியாதுள்ளேன்.

2. அபிப்பிராயம்

2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2.4. 2.2.5, 2.2.6, 2.2.7. 2.2.8 மற்றும் 2.2.9 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதிலில் தாமதம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டி போதிலும் நிதிக்கூற்றுக்கள் 03 ஆண்டுகள் 06 மாத தாமதத்தின் பின்னர் 2011 செப்தெம்பர் 19 ஆந் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் வருமானங்களும் செலவுகளும் வெவ்வேறாகக் கணக்குகளில் பதியப்பட வேண்டிய போதிலும் தலைமை அலுவலகத்தின் வீதவரி மற்றும் குத்தகை கணக்கில் கிடைத்த குத்தகை வாடகை வருமானமான ரூபா 1,268,784 தொகையும் செலுத்திய வீதவரிச் செலவான ரூபா 738,910 தொகையும் கணக்கீடு செய்ததன் காரணமாக வீதவரி மற்றும் குத்தகைக் கணக்கில் ரூபா 529,874 தொகையான செலவு மீதி காணப்பட்டது.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சபையின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 316.5 மில்லியனைக் காட்டப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் கட்டிடங்களின் பெறுமதி காட்டப்பட்டிருந்த மொத்தப் பெறுமதியில் 50% ஆன ரூபா 158.2 மில்லியன் ஆகக் கருதி நேர்கோட்டு முறையின் அடிப்படையில் 2.5% ஆகிய ரூபா 3.9 மில்லியன் மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2006 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐயக்கடனுக்கான ஏற்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 89,721,206 ஆக இருந்ததுடன் 2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கணக்கின் மீதி ரூபா 22,149,928 வரை குறைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஐயக்கடனுக்கான மிகை ஏற்பாடான ரூபா 67,571,278 தொகை இலாபநட்டக் கணக்கிற்குச் செலவுவைக்கப்பட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டின் இலாப நட்டக்கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே செலவாக ரூபா 22,149,928 தொகை இலாப நட்டக்கணக்கிற்கு வரவுவைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 89,721,206 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

மேலும் 2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கின் மீதியாகிய ரூபா 22,149,928 தொகை கடன்பட்டோர் மீதியிலிருந்து கழிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்குப் பதிலாக ரூபா 44,299,856 தொகை குறைக்கப்பட்டதன் காரணமாக 2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் மீதி ரூபா 22,149,928 தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(இ) 2006 ஆம் ஆண்டிற்கான ஐயக்கடன் ஏற்பாடு செய்யும் போது ரூபா 69,829,294 தொகைக்குப் பதிலாக ரூபா 89,721,207 தொகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக 2007 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 19,891,913 தொகையினால் அதிகரித்தும் அத்திகதியில் உள்ளவாறான கடன்பட்டோர் மீதி அத்தொகையால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சேமலாப நிதியத்தின் பெறவேண்டிய கடன் கணக்கு மீதியாகிய ரூபா 53,488,293 தொகை தலைமை அலுவலகத்தின் சேமலாப நிதியத்தின் செலவுகளுக்குள் பதியப்பட்டதன் காரணமாக சேமலாப நிதியத்தின் செலவு ரூபா 53,488,293 தொகையால் அதிகரித்தும் சேமலாப நிதியத்தின் பெறவேண்டிய கடன் கணக்கு குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகத்தின் ரூபா 1,331,797 தொகைக்கான அட்டுறுச் செலவுகளுக்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நட்டம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 169,327,981 தொகையான வருமானம் மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்று அது ஆண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இப்பிழையை சரிசெய்யும் போது உரிய வருமானக் கணக்கிற்கு வரவுவைப்பதற்குப் பதிலாக ரூபா 4,686,463 தொகையை 03 செலவுக் கணக்குகளுக்கு வரவு வைத்தன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானமும் செலவும் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டிற்காக ரூபா 1,772,817 தொகைபேசிச் செலவுக் கணக்கில் பதியப்பட்டதன் காரணமாக அத்தொகையால் உரிய வருமானமும் செலவும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்காக தலைமைக் காரியாலயத்தினால் செலுத்தப்பட்ட ரூபா 3,822,908 கூட்டுத்தொகையான போக்குவரத்துச் செலவுகள் ஏனைய படிகளின் கீழ் கணக்குவைக்கப்பட்டிருந்தன.

(ஏ) தலைமைக் காரியாலயத்தினால் செலவு செய்யப்பட்ட ரூபா 1,785,088 தொகையான விளம்பரச் செலவு விளம்பரச் செலவுகளாக கணக்குவைப்பதற்குப் பதிலாக ஏனைய செலவுகளின் கீழ் கணக்குவைக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,785,088 தொகையால் விளம்பரச் செலவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் போது 6 பஸ் கம்பனிகளுக்கு முறையே ரூபா 217,685,421 மற்றும் ரூபா 369,038,052 கூட்டுத் தொகையான உரிய சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தலைமைக் காரியாலயத்திற்கு கையேற்கையில் சொத்துக்கள் மீள் மதிப்புச் செய்யப்பட்டிராததுடன் பொறுப்புக்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பெறவேண்டியதாகக் காணப்பட்ட பொலிஸ் மற்றும் ஏனைய போக்குவரத்து உத்தரவுப் பத்திர வருமானக் கூட்டுத்தொகை ரூபா 17,367,713 ஆக இராணுவ போக்குவரத்து உத்தரவுப்பத்திர வருமானக் கணக்கில் பதியப்பட்டதன் காரணமாக அத்தொகையால் இராணுவ பிரயாண உத்தரவுப் பத்திரக் கணக்கு அதிகரித்தும் பொலிஸ் பிரயாண உத்தரவுப் பத்திர வருமானக் கணக்கும் ஏனைய பிரயாண உத்தரவுப் பத்திர வருமானக் கணக்கும் முறையே ரூபா 7,824,495 தொகையாலும் ரூபா 9,543,218 தொகையாலும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஓ) 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பஸ் விற்பனை இலாபத்தினை கணக்கீடு செய்யும் போது பஸ்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட பஸ் கணக்கிற்கும் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட பஸ்களின் பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கிற்கும் பஸ் வண்டி பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கிற்கும் செலவாக்கியதன் காரணமாக பாவனையிலிருந்து ஒதுக்கிய பஸ் வண்டிக் கணக்கும் பாவனையிலிருந்து ஒதுக்கிய பஸ்வண்டி பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கும் முறையே ரூபா 202,057,341 ஆலும் ரூபா 185,362,986 ஆலும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) பிராந்திய போக்குவரத்துச் சபையின் இருப்பினை தலைமைக் காரியாலயத்திற்கு கையேற்கையில் ரூபா 54,454 தொகையான இருப்பு மீதி ஒன்று செலவு மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஃ) பஸ் கம்பனிகளைப் பொறுப்பேற்கும் போது தென் கொழும்பு பிராந்திய போக்குவரத்துச் சபையிலுள்ள கடன்கொடுத்தோர் கணக்கில் ரூபா 27,097,630 தொகையான செலவு மீதியும் ரூபா 27,017,621 தொகையான வரவு மீதியும் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. பொறுப்பேற்கப்பட்ட வரவு மீதியானது பிழையாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக இடம்பெற்றிருந்த போதிலும் அதனை சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) சேமலாப நிதியத்திற்கு சபையின் பங்களிப்பானது ஊழியர்களில் ஒரு பகுதியினரின் சம்பளத்திலிருந்து 12% மும் மேலும் ஊழியர்களின் வேறோர் பகுதியினரின் சம்பளத்தில் இருந்து 15% மும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அவர்களின் சம்பளத்தில் 3% மும் கழிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் இடையேயான பங்களிப்பு சராசரியாக 1:4 அல்லது 1:5 இருக்க இடையிலான விகிதாசாரத்தில் காணப்படுதல் வேண்டும். எனினும் கணக்கீட்டுத் தவறின் காரணமாக மீளாய்வாண்டிற்கு உரிய அக்கணக்கினை ஒப்பிடுகையில் முரண்கள் அவதானிக்கப்பட்டன.

(கா) 2007 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வழியில் உள்ள காசு ரூபா 154,705 செலவு மீதி ஒன்றாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(கி) பிராந்திய அலுவலகங்களில் ரூபா 46,249 கூட்டுமொத்தமான பெறவேண்டிய 2 கணக்கு மீதிகள் செலவு மீதிகளாகக் எனக் காட்டப்பட்டிருந்தன.

2.2.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2011 யூலை 02 ஆந் திகதிய சபைப் பிரதான வழங்கல் முகாமையாளரின் கடிதத்தின் பிரகாரம் 2007 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தலைமைக் காரியாலயக் களஞ்சியங்களில் காணப்பட்ட இறுதி இருப்புக்களின் பெறுமதி ரூபா 69,975,691 ஆக இருந்த அதேவேளை பிராந்திய போக்குவரத்துச் சபைகளிடமிருந்து பொறுப்பேற்கப்பட்ட இருப்புக்களின் பெறுமதி ரூபா 88,946,412 ஆக இருந்தது. சபையினால் இருப்புக்கள் கணிப்பீடு செய்யப்படாது தலைமை அலுவலகத்திலுள்ள இருப்புக்களாக ரூபா 1,075,987,219 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க இறுதி இருப்பின் பெறுமதி தொடர்பாக கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

தோற்றுவிக்கப்பட்ட திகதியான 2005 ஒக்டோபர் 19 ஆந் திகதி பொறுப்பேற்கப்பட்ட 11 பஸ் கம்பனிகள் வழங்கிய பங்கு மூலதனமும் ஊழியர்களின் பங்கு மூலதனமும் சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 4,993,886,870 ஆக இருந்ததுடன் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 4,356,035,020 ஆக இருந்ததனால் ரூபா 637,851,850 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவேட்டின் பிரகாரம் :-		
- ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பங்குகளின் அளவு	41,114,447	
- திறைசேரிக்கு வழங்கப்பட்ட பங்குகளின் அளவு	394,489,055	
பங்குகளின் மொத்த கூட்டுத்தொகை		435,603,502

ரூபா 10 படியாக பங்குகளின் பெயரளவுப் பெறுமதி	ரூபா	1,356,035,020
2005 ஒக்டோபர் 18 ஆந் திகதியில் உள்ளவாறு புறக்கணக்காய்வாளர்களின் அறிக்கையின் பிரகாரம் பங்குகளின் பெயரளவுப் பெறுமதி	ரூபா	1,993,886,870
வேறுபாடு	ரூபா	637,851,850

2.2.6 தொங்கல் கணக்கு

2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 10 தொங்கல் கணக்குகளின் ரூபா 718,646,012 கூட்டுமொத்தமான வரவு மற்றும் செலவு மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.7 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீண்டகாலமாகக் காணப்பட்டு வந்த தலைமை அலுவலகத்தின் ரூபா 112,864,736 கூட்டுத்தொகையான பெறவேண்டிய 14 மீதிகளை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாது முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) தலைமை அலுவலகத்தின் ரூபா 2,218,562,124 தொகையான கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட ஒரு ஆண்டிற்கு மேல் பழமையாய்ந்த ரூபா 1,293,026,267 தொகையான கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வரும் பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த 05 நீண்டகாலக் கடன் கணக்குகளின் மீதிகளின் ரூபா 1,976,660,492 கூட்டுத்தொகையைத் தீர்த்து வைக்காது 2007 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிதிக்கூற்றுக்களில் காட்டிக்காட்டப்பட்டிருந்தது.

(ச) 2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்து இலங்கை கடன் மீதி ரூபா 38,015,684 ஆக இருந்ததுடன் அதற்காகச் செலுத்து வேண்டிய கடன் வட்டிக் கணக்கின் மீதி ரூபா 1,176,074,088 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பான காலப்பகுப்பாய்வும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் இக்கணக்கு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2005 ஒக்டோபர் 18 ஆந் திகதி சபையினைத் தோற்றுவிக்கும் போது பொறுப்பேற்றுக்கொண்ட ரூபா 1,174,219,783 கூட்டுத்தொகையான நீண்டகாலப் பொறுப்புக்களின் 16 மீதிகள் 2007 திசெம்பர் 31 வரை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் இம்மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2005 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 4,893,293 தொகையான இரண்டு முற்பண மீதிகள் 2007 திசெம்பர் 31 வரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2006 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பிராந்திய போக்குவரத்துச் சபைகளின் கீழ் காணப்பட்ட ரூபா 1,231,331 தொகையான வழிப்போக்கில் உள்ள வரிபொருள் இருப்பு இலங்கை போக்குவரத்துச் சபைக்கு பொறுப்பேற்கப்பட்டதன் பின்னரும் 2007 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நடைமுறை வேலை கட்டிடக்கணக்கின் மீதியாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 35,751,493 பெறுமதி நீண்டகாலமாக கணக்குகளில் காணப்பட்டதுடன் உரிய மீதியினைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.8 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக அவற்றிற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

	விடயம்	பெறுமதி		சமர்ப்பிக்கப்படாத சான்று
(அ)	நிலையான சொத்துக்கள்	6.057,089.897	(i)	நிலையான சொத்துப்பதிவேடு
			(ii)	2005 ஒக்டோபர் 18 ஆந் திகதி பொறுப்பேற்கப்பட்ட 11 பஸ் கம்பனிகளுக்கும் 07 பிராந்திய போக்குவரத்துச் சபைகளுக்குமுரிய பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட பெறுமதியான முறையே ரூபா 3,141,290,735 தொகையும் ரூபா 370,045,232 தொகையுமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக மெய்மையாய்வுச் சபை அறிக்கை/ பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டதற்கான சான்று.
(ஆ)	முதலீடு	295,540,691		பட்டோலைகள்
(இ)	நானாவித கடன்பட்டோர்	1,755,043,785	(i)	மீதிகளை உறுதிப்படுத்தல்
			(ii)	காலப்பகுப்பாய்வு
(ஈ)	வங்கி மீதி	296,353,450		தலைமை அலுவலகத்திற்குரிய வங்கி கணக்குகளைத் தவிர்த்து ஏனைய வங்கி கணக்குகள் தொடர்பான வங்கி கணக்கிணக்கக் கூற்று
	வங்கி மேலதிகப்பற்று	407,309,772		
(உ)	கடன்கொடுத்தோர்	4,627,322,423	(i)	தனித்தனி கணக்குகள் தொடர்பான விபரம்
			(ii)	காலப்பகுப்பாய்வு
(ஊ)	இருப்பு மீதி	1,576.900,365		இருப்பு மெய்மையாய்வு அறிக்கை

2.2.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மை
(அ)	சபையின் ஊழியர் சேமலாப நிதிய விதி மற்றும் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம்	ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்படும் சேமலாப நிதிய பங்களிப்பும் சபையின் பங்களிப்பும் ஊழியர்களின் உழைக்கப்பட்ட உரிய மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்திற்குச் செலவுவைக்கப்பட வேண்டிய போதிலும் 2007 டிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பங்களிப்பு பணத்தையும் முன்னைய ஆண்டிற்கான பங்களிப்பு பணத்தையும் உள்ளடக்கிய ரூபா 559,376.279 தொகை சபையின் சேமலாப நிதியத்திற்கும் ரூபா 486,567,910 தொகை இலங்கை மத்திய வங்கிக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம்	ஊழியர்களின் சம்பளத்திலிருந்து 3% இற்குச் சமமான அளவு சபையினால் ஊழியர்களின் உழைந்த உரிய மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்திற்குச் செலவுவைக்கப்பட வேண்டிய போதிலும் 2007 டிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பங்களிப்புப் பணத்தையும் முன்னைய ஆண்டிற்கான பங்களிப்பு பணத்தையும் உள்ளடக்கிய ரூபா 51,699,930 தொகை அவ்வாறு செலவு செய்யப்பட்டிருக்காததுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு ஒன்று சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக எந்த ஆண்டிற்காகச் செலுத்த வேண்டியிருந்தது என்பதனை அவதானிக்க முடியாதிருந்தது.

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஎடீ.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம்

I. 5.2.4 ஆம் பந்தி	நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 03 ஆண்டுகளுக்கு முன்னர் பணிப்பாளர்கள் சபையினால் பாதீடு அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் சபை அவ்வாறு செய்திருக்கவில்லை.
II. 5.2.5 ஆம் பந்தி	பணிப்பாளர்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரதி ஒன்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரையான பாதீடுகள் 2011 யூலை 18 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

3.1 நிதி மீளாய்வு

3.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2007 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சபை ரூபா 5,946,554,943 தொகையான நட்டத்தினை அடைந்திருந்ததுடன் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 4,409,283,804 தொகையான மானியத்தின் காரணமாக அந்நட்டம் ரூபா 1.537.271,139 வரை குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டில் ரூபா 1,645,802,316 தொகையான நட்டம் அடையப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 108,531,177 தொகையான முன்னேற்றம் சுட்டிக்காட்டப்பட்டது.

3.2 செயற்பாட்டு மீளாய்வு

3.2.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1958 ஆம் ஆண்டின் போது பஸ் கம்பனிகளை மக்கள்மயப்படுத்தும் போது சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக ரூபா 8,299,517 தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. அச்சந்தர்ப்பங்களின் போது காணிகளின் மொத்த பெறுமதியினை உரிமையாளர்களுக்குச் செலுத்தாததன் காரணமாக அவற்றின் உரித்தினை சபைக்கு மாற்றிக்கொள்வதற்கு முடியாதிருந்தது. இக்காணிகளின் உள்ளமையும் உரித்தும் தொடர்பாக விசாரித்தறிந்து காணிகள் அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்து கொள்வதற்கு அல்லது தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2004 திசெம்பர் மாதத்தின் போது சபையின் தலைமை அலுவலகத்தினதும் பிராந்திய அலுவலகங்களினதும் ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து அறவிட்டு, தீர்த்துவைக்கும் அடிப்படையில் சுனாமி நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,403,534 தொகையைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 537,781 தொகையான ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட பணம் கடன்கொடுத்தோராகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) காசு கட்டுநிதி முடிவடைவதற்கு முன்னர் அது மீள நிரப்பப்படவேண்டிய போதிலும் 2007 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 28,398 கூட்டுத்தொகையான 02 கட்டுநிதிக் கணக்குகளில் செலவு மீதிகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. இவை இனங்காணப்பட்டு முறையாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட களஞ்சியத்தின் சேதமடைந்த பொருட்களுக்கான ரூபா 33,309,516 தொகையான ஏற்பாடு 2007 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் காட்டப்பட்டிருந்ததுடன் இம்மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) செயற்பாடாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக ரூபா 1,221.307 மில்லியன் தொகையான கணக்கு மீதிகளைப் பதிவழிப்பது தொடர்பாக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் 2002 யூலை 30 ஆந் திகதி சபை பொது முயற்சிகள் திணைக்களத்திடம் வேண்டிக் கொண்டது. அம்மீதிகள் தொடர்பாக முழுமையான பரிசோதனை செய்து பணிப்பாளர்கள் சபையின் விளக்கம் மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீதிகளைப் பதிவழிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2.2 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிட்டம்புவ டிப்போவில் ஊழியர்களினால் வயம்ப அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி கடன் தவணைப் பணம் ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட போதிலும் டிப்போவினால் கொடுப்பனவு செய்யப்படாததன் காரணமாக வழக்குத் தீர்ப்பின் படி அந்நிலுவையான தவணைப் பணத்திற்கான வட்டியான ரூபா 865,257 தொகையை டிப்போ செலுத்த வேண்டி ஏற்பட்டது.

(ஆ) கடன்கொடுத்தோர் மீதியில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக ரூபா 17,312,659 கூட்டுமொத்தமான மிகைக் கட்டணம் செலுத்தவேண்டி ஏற்பட்டது.

3.2.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்டவைகளுக்கும் உள்ளபடியானவைகளுக்குமிடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் காணப்பட்டதனால் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக சபையின் தலைவருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு
(இ) கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும்
(ஈ) கணக்கீடு
(உ) கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தல்
(ஊ) சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பொறுப்பேற்றல்
(எ) கணக்கு மீதிகளைத் தீர்த்துவைத்தல்
(ஏ) பாதீடு

எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
Ne/Sd